# பணிநிறைவு வாழ்த்து!

**நாள் 30-06-2020**

**திருமிகு S. ஈஸ்வர்ரெட்டி**
**இணை ஆணையர்**

மன்னும் நற்தமிழி னின்றும்;
மருவிய தாய்த்தான் பிறந்த,
போன்னார் மொழித் தெலுங்கின்,
புதல்வ னாய்ப் பிறந்திட்ட,
சென்னையில் வாழ்வைச் செதுக்கிய,
செம்மல் ஈஸ்வர்ரெட்டி ஐயா,
இன்னாளில் காண்பார் பணிநிறைவு,
இறையருளால் வாழ்க நிறைந்து!





**திருமிகு R பிரேம் சந்த்,**
**மதிப்பீட்டு அதிகாரி**

நாச்சியார்க் கோயில் பிறந்த,
நன்மகனே பிரேம் சந்த்;
பாச்சரமாய்த் தமிழும் கற்று,
பழகுதற்கும் இனிய னாகி,
பூச்சரமாய்ச் சுங்கம் சூடி,
பொலிந்த மராத்திச் சுடரே!
பேச்சரவம் இனி எங்கு கேட்கும்?
பிரியமாய் விடை தருவோம்!



**திருமதி N.A. நேகா,**
**மதிப்பீட்டு அதிகாரி**

மன்னும் தமிழைப் போல்,
மருவில்லாக் குரலுடனே;
முன்னமாய்ச் சுங்கத்தில் வந்து,
முகிழ்வுடனே பணி சேர்ந்து,
என்னாளும் நினைவி லிருக்க,
இனிமையாப் பேசும் எங்கள்
பொன்சீர் நளினியெனும் நேகாவே,
பிரியமாய் விடை தருவோமே!



அன்புடன்,

**கு.ப. அசோகன்,**

30-06-2020